# பத்திரிகைச் செய்தி

செ.வெ.எண்: 7/செப்டம்பர்/2011 நாள்: 3.9.2011

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (3.9.2011) நடைபெற்றது.

-----

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (2010-11) கீழ் 5 நபர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்களையும், 9 நபர்களுக்கு மடக்கு சக்கர நாற்காலிகளையும், 6 நபர்களுக்கு கைத்தாங்கிகளையும், 1 நபருக்கு முழங்கைத்தாங்கியினையும், 10 நபர்களுக்கு கறுப்புக் கண்ணாடி, மடக்கு ஊன்று கோல்களையும், 3 நபர்களுக்கு பார்வையற்றோர்களுக்கான கைக்கடிகாரங்களையும், 28 நபர்களுக்கு காதொலிக் கருவிகளையும், 4 நபர்களுக்கு செயற்கைக் கால்களையும், 3 நபர்களுக்கு செயற்கை கையினையும் ஆக மொத்தம் 69 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.1,16,405/- மதிப்புள்ள உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.முத்துக்குமரன் ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும், 15 நபர்களுக்கு இயற்கை இறப்பு நிவாரண உதவித் தொகைகளையும், 13 நபர்களுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித் தொகைகளையும், 2 நபர்களுக்கு இந்திராகாந்தி தேசிய விதவை உதவித் தொகைகளையும், 1 நபருக்கு இந்திராகாந்தி மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகையும், 4 நபர்களுக்கு விதவை உதவித்தொகையும், ஆக மொத்தம் 35 நபர்களுக்கு ரூ.4,27,500/- மதிப்பில் உதவித் தொகைகளையும் மாவட்ட ஆட்சியத்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.முத்துக்குமரன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்(பொ) திருமதி.இரா.சியாமளா, சமூகப்பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் திருமதி.ஜி.சசிகால, தனிவட்டாட்சியர் சமூகப்பாதுகாப்புத் திட்டம் திருமதி.டி.இராஜாத்தி உட்பட பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்ப அலுவலகம், புதுக்கோட்டை.